2008 மே 5]

2. தகவல் கோரல்

(அ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரயில் பயண இருக்கை ஒதுக்கீட்டில் முன்னுரிமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று மூன்று அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து அவையிலே எடுத்துக்கொள்ளவிருக்கிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலிலே உட்காருங்கள்.

பள்ளிப்பட்டு தொகுதியில் கூலி உயர்வு தொடர்பாக நெசவாளர்கள் போராட்டம் நடத்திவருவது குறித்தும், கோயம்புத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை தொகுதியில் உள்ள அமராவதி அணையில் பாசனத்திற்கு தண்ணீர் இருந்தும் A.M.C. வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிடாததால் கரும்புப் பயிர்கள் காய்ந்து வருவது குறித்தும், திண்டுக்கல் மாவட்டம், நத்தம் ஒன்றிய உதவி தொடக்கக் கல்வி அலுவலரும், திண்டுக்கல் D.E.O. அலுவலகத் தட்டச்சரும் சேர்ந்து தொடக்கக் கல்வி இயக்குநரைப்போல கையெழுத்து போட்டு 9 ஆசிரியர்களுக்கு பணி மாறுதல் உத்தரவு கொடுத்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்தும் மூன்று முன்னறிவிப்புகளை எடுத்துக்கொள்ளவிருக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. சுதர்சனம், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே இருக்கின்ற, சட்டமன்ற உறுப்பினர்களுடைய உரிமையைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு மாண்புமிகு அவைநாயகர் அவர்களுக்கு உண்டு. நேற்றையதினம், நாகர்கோவிலிலிருந்து சட்டமன்றத்திற்கு வருகைதந்த 4 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அங்கே E.Q. கொடுக்கப்பட்டும், இரயிலிலே இடம் இல்லை என்றுகூறி, அவர்கள் சட்டமன்றப் பணியாற்றுவதற்குத் தடையாக அந்த நிருவாகம் இருந்திருக்கிறது. பல்வேறுபட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், 234 சட்டமன்ற உறுப்பினர்களில் அமைச்சர்கள் தவிர, மற்றவர்கள் அத்தனைபேருக்கும், வாரத்திலே இரண்டு நாட்கள் தொகுதிகளுக்குச் சென்று பணியாற்றிவிட்டுத் திரும்புகிறபோது, இப்படிப்பட்ட துன்பங்கள் நிகழ்கின்றன. நீங்கள் உடனடியாக மத்திய அரசைத் தொடர்புகொண்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் எப்போதெல்லாம் E.Q. கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு அந்த நேரத்திலே நிச்சயமாக இடம் கிடைப்பதற்கு ஆவன செய்வீர்களா, முன்னுரிமை கொடுத்து

அவர்களுடைய seat–கள் confirm செய்து கொடுக்கப்படுமா என்பதை உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுசம்பந்தமாக உங்கள் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால் அவர்கள் T.V.–க்கே பேட்டி கொடுத்திருக்கிறார். அவர் ஒருசில கோரிக்கைகளை வைத்திருக்கிறார். அந்தக் கோரிக்கைகள் நியாயமான கோரிக்கைகளாகத்தான் தெரிகின்றன. இருந்தாலும், சட்டப் பேரவையின் சார்பாக மத்திய அரசுக்கு உரிய நடவடிக்கைக்காக பரிந்துரை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

(ஆ) பள்ளிப்பட்டு தொகுதி விசைத்தறி நெசவாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பள்ளிப்பட்டு தொகுதியில் கூலி உயர்வு தொடர்பாக நெசவாளர்கள் போராட்டம் நடத்தி வருவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி, திரு. கே.எஸ். விஜயகுமார், அ.இ.அ.தி.மு.க., டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இந்திய தேசிய காங்கிரஸ் ஆகியோர் விதி 56–ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மானமாக அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி சுருக்கமாகச் சொல்லுங்கள். இந்தப் பிரச்சினை குறித்து agreement எல்லாம் போட்டு முடித்தாகிவிட்டது. எனவே, சீக்கிரம் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20 நாட்களாக பள்ளிப்பட்டு தொகுதியில் விசைத்தறி நெசவாளர்கள் வேலைநிறுத்தம் செய்து பட்டினிச் சாவு ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலையில் நேற்றைக்கு முன்தினம் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி இன்றைக்கு அந்த வேலைநிறுத்தம் கைவிடப்பட்டிருக்கிறது.

பள்ளிப்பட்டு தொகுதியில் பொதட்டூர்பேட்டை, அத்திமாஞ்சேரிப்பேட்டை, அம்மையார்குப்பம், வங்கனூர், ராஜா நகரம், மத்தேரி, ஆர்.கே. பேட்டை, பி.ஆர். பள்ளி, மத்தூர்,